உ
ஸ்ரீ குஹாயநம:
திருப்புகழமிர்தம்
(மாத வெளியீடு)
திருப்புகழ் தொண்டன்
கிருபானந்த வாரி
...ழமிர்தம் காரியாலயம்,
...காங்கேயநல்லூர்.
...DARAN'S ENGRAVERS MADRAS

வருட சந்தா ரூ. 2-0-0.

பொருளடக்கம்.

திருப்புகழ்		கந்தர் திருவிளையாடல்	
திருமக ளுலாவு	123	இடும்பனுக்கருளியவரலாறு	13[illegible]
ஸ்வரம் - திருமகளுலாவு	129	கற்பு	139
கந்தரலங்காரம்		நன்றி மறவாமை	14[illegible]
சொராத்ரி கூறிட்ட	130	சோத்திரக்கோவை	14[illegible]

(கந்தரநுபூதி பின்னர் வரும்)

திருப்புகழமிர்தம் மலர்கள்

ஈசுவர, பிரமாதி, விக்கிரம, விஷு சித்திரபாநு ஆண்டு மலர்கள் மட்டும் கிடைக்கும். விலை மலர் பிரதி ஒன்றுக்கு ரூ. 2-0-0 சித்திரபாநு ஆண்டு மலர் மட்டும் 2-4-0. மற்ற ஆண்டு மலர்கள் கைவசம் கிடையாது. தபாற்செலவு (ரிஜிஸ்ட்ரேஷன் செலவு உள்பட பிரதி ஒன்றுக்கு. ரூ. 0-7-0.

உமாபதி சிவாசாரியர் திரட்டியருளிய தேவார அருள் முறைத் திரட்டு திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் எழுதிய பதவுரை விளக்கவுரையுடன் கூடியது.

விலை ரூ. 1-0-0. தபாற்செலவு ரிஜிஸ்ட்ரேஷன் உள்பட பிரதி 1-க்கு 0-6-0.

திருப்புகழமிர்தம் ஆபீஸ்,
காங்கேயநல்லூர், (Via) காட்பாடி. N. A.

பிரிவாற்றுமை.

வெண்பா

இறகொடிந்த புள்ளனையாம் ஏங்கத்திக் காய
விறகொடிக்க வந்தியம வெய்யோரின்—அறுசிலரும்
அற்பகமா மாத்தூர்மூத் துக்குமர அண்ணலெனுங்
கற்பகத்தை வெட்டினன் காய்ந்து.

வடவூர் திருப்பணிக்கு 1000 ம் ரூபாய் வழங்கிய வள்ளலும், எனது உயிர்த்தோழரும், என் உள்ளத்தில் என்றும் உலவுபவரும், சிறந்த செல்வாக்குடையவரும், உயர்ந்த மனமும் தனமும் இனமும் உடையவருமாகிய மாத்தூர் திருவாளர், மூத்துக்குமாரசாமிப்பிள்ளை யவர்கள், முருகனடி சேர்ந்ததற்குப் பெரிதும் வருந்துகிறேன். அவருடைய ஆன்மா சாந்தியடைவதாக. அவருடைய குடும்பத்திற்கு முருகனருள் துணைசெய்வதாக. கிருபானந்தவாரி.

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றுள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 8. Vol 8.	சுபாநு ஆடு புரட்டாசி மீ 1உ செப்டம்பர் 1943	இதழ். 6. No 6.

திருப்புகழ்

கதிர்காமம்.

திருமக ளுலாவு மிருபுய முராரி
　　திருமருக நாமப் 　　　　　　　　பெருமாள்காண்
ஜெகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
　　தெரிதரு குமாரப் 　　　　　　　　பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
　　மரகத மயூரப் 　　　　　　　　பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
　　மருவுகதிர் காமப் 　　　　　　　　பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
　　அமர்பொருத வீரப் 　　　　　　　　பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
　　அமலர்குரு நாதப் 　　　　　　　　பெருமாள்காண்
இருவினையி லாத தருவினை விடாத
　　இமையவர்கு லேசப் 　　　　　　　　பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
　　இருதனவி நோதப் 　　　　　　　　பெருமாளே.

பதவுரை:

இலகு சிலை வேடர் கொடியின் - விளங்குகின்ற வில்லைத் தாங்கியுள்ள வேடர் குடியிற் றோன்றிய கொடிபோன்ற மென்மையுடையாராகிய வள்ளியம்மையாரின், அதிபார இருதன விநோத - மிகவும் பருத்துள்ள இரண்டு தனங்களிலும் பொழுது போக்கும், பெருமாள் - பெருமையிற் சிறந்தவராகிய முருகக் கடவுளை, திருமகள் உலாவும் - இலக்குமிதேவி வாழ்கின்ற, இரு புய - இரண்டுபுய மலைகளை யுடையவரும், முர அரி - முரன் என்ற அசுரனை அழித்தவரும் ஆகிய திருமாலினது, திரு மருக நாமப் பெருமாள்காண் - சிறந்த மருகர் என்ற திருப்பேரை யுடைய பெருமானென்று அறிவாயாக; செகதலமும் - மண்ணுலகமும், வானும் - விண்ணுலகமும், மிகுதிபெறு பாடல் - மிகுதியான அருட்பாடல்களால் ஆராய்ந்து, தெரிதரு குமார பெருமாள் காண் - அறிந்து கொள்ளத்தக்க குமாரக் கடவுள் என்று அறிவாயாக; மருவும் அடியார்கள் — திருவருள் நெறியில் கலந்துள்ள அடியவர்களின், மனதில் விளையாடும் — உள்ளக் கமலத்தில் திருவிளையாடல் புரிகின்ற, மரகத மயூர பெருமாள்காண் - மரகத நிறம் போன்ற பச்சை மயில்வாகனக் கடவுள் என்று அறிவாயாக, மணி தரளம் வீசி அணி - இரத்தின மணிகளையும் முத்துக் களையுங் கொழித்து எறிந்து திருவடியில் அணிகின்ற, அருவி சூழ மருவு - மாணிக்க நதியென்னும் அருவி சூழப் பொருந்தியுள்ள, கதிர்காம பெருமாள்காண் - கதிர்காமம் என்னுந் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமான் என்று அறிவாயாக; அருவரைகள்- சிறந்த மலைகள், நீறுபட — துகள்பட்டு ஒழியவும், அசுரர் மாள - சூராதி யவுணர்கள் மாண்டு அழியவும், அமர்பொருத - போர் புரிந்த, வீர பெருமாள்காண் — வீரமூர்த்தி யென்று அறிவாயாக; அரவு - பாம்பும், பிறை - பிறைச்சந்திரனும், வாரி — கங்கையும், விரவுசடை வேணி - கலந்து வாழ்கின்ற சடைமுடியை யுடைய வரும், அமலர் - அநாதி மலமுத்தரும் ஆகிய சிவபெருமானுக்கு, குருநாத பெருமாள்காண் - குருமூர்த்தியாக இருந்து உபதேசித்த பெருமான் என்று அறிவாயாக; இருவினை இலாத - நல்வினை தீவினை என்ற இரண்டு வினைகளிலும் நடுநிலை பெற்றவர்களும், தருவினை விடாத — கொடுக்கின்ற தொழிலை விடாதவர்களு மாகிய, இமையவர் - தேவர்களுடைய, குல ஈச பெருமாள்காண் - கூட்டத்திற்குத் தலைவர் என்று அறிவாயாக.

பொழிப்புரை.

விளங்குகின்ற வில்லைத் தரித்த வேட்டுவர் குடியில் அவதரித்த கொடிபோன்ற மெல்லியலையுடைய வள்ளி யம்மையாருடைய மிகவும் பருத்துள்ள இரு தனங்களி லும் பொழுது போக்குபவராகிய பெருமிதமுடைய முரு கக் கடவுளை, இலக்குமிதேவி வாழ்கின்ற இரண்டு புயா சலங்களை யுடையவரும் முரன் என்ற தானவனை வதைத்த வரு மாகிய நாராயண மூர்த்தியின் திருமருகர் என்ற திரு நாமத்தை யுடைய பெருமான் என்றும், மண்ணுலகமும் விண்ணுலகமும் துதிசெய்கின்ற மிகுதியான அருட்பாடல் களால் ஆராய்ந்து அறிதற்குரிய குமார பரமேசுவரர் என்றும், திருவருள் நெறியில் கலந்துள்ள மெய்யடியார் கள் உள்ளக் கோயிலில் ஒழியாது திருவிளையாடல் புரியும் பச்சைமயில் வாகனக் கடவுள் என்றும், இரத்தின மணி களையும் முத்து மணிகளையும் அலைகள் என்ற கரத்தால் கொழித்து பெருமான் திருவடியில் வீசி யணிகின்ற, மாணிக்க நதி சூழ்ந்துள்ள கதிர்காமம் என்ற திவ்ய க்ஷேத் திரத்தில் எழுந்தருளியுள்ள பெருமான் என்றும், சிறந்த மலைகள் துகள்பட்டொழியவும் சூராதி யவுணர்கள் மாய்ந் தொழியவும் போர்புரிந்த வீரப்பெருமான் என்றும், பாம்பு பிறைமதி நதி ஆகியவற்றை முடியில் தரித்துள்ள அமல ராகிய சிவபெருமானுக்குப் பிரணவோபதேசம் புரிந்த பரமகுருநாதர் என்றும், இருவினை யொப்பு கைவரப் பெற்று, கொடைத்தொழிலை விடாததேவர்கள் குழாஉக் குத் தலைவர் என்றும் அறிந்து மனமே நீ உய்வாயாக.

விரிவுரை.

திருமகளுலாவு..........திருமருக:—

இலக்குமியைத் திருப்புயத்தில் திருமால் தரித்தனர் என்பதன் கருத்து, காக்குங் கடவுளாதலின், காத்தற்

ஒருமிலுக்கு இடையூறு செய்வோரை அழிப்பராதலால், திருமாலின் புயத்தில் வீரலட்சுமி உலவுகின்றனள். முராரி - முர அரி; முரன் என்ற அசுரனைக் கொன்றதனுல் முராரி என்ப. திருமாலாதி தேவரும் மதிக்கு "மானமூர்த்தி" யாக விளங்குகின்ருர்.

ஜெகதலமும்......... தெரிதருகுமார:—

விண்ணுலகில் உள்ளவரும், மண்ணுலகில் உள்ள வரும் முருகவேளை உள்ளம் உருகிப் பாடி மகிழ்வர். அப் பாடல்களின் இனிமையையும் தாரதம்யங்களையும் ஆறு முகக் கடவுள் அறிகின்றனர். அவர் பெருந்தமிழ்ப் புலவர் அன்ருே?

"கல்வி கரை கண்ட பெருமாளே"

"திரிபுரம் பொடியாக்கிய சங்கரர்
குமர கந்த பராக்ரம செந்தமிழ்
தெரிவுகொண்டடியார்க்கு விளம்பிய
பெருமாளே"

எங்குந் தங்குக முருகன் புகழ்; புகழ்ப்பாடல் பொலிக; அதுவே கலியின் மிகப்பெரிய பாவங்களைக் கெடுக்கவல்லது. அதனுல் "கானமூர்த்தி" யாக விளங்கு கின்ருர்.

மருவு மடியார்கள் மனதில் விளையாடும்:—

திருவருள் நெறியை மருவுபவர் என்று கூட்டுக. முரு கன் சின்னஞ் சிறுபிள்ளை; பிள்ளைகட்கு விளையாடுவதில் அளவுகடந்த ஆர்வம் உண்டு. அங்ஙனம் ஆடுவதற்கு ஓர் அழகிய - குளிர்ந்த இடம் வேண்டும். குழந்தை குமரப்ப னுக்கு விளையாடுகின்ற இடம் எது? அடியார் உள்ளமாகிய பூங்காவனமே.

"மாசிலடியார்கள் வாழ்கின்ற ஊர்சென்று
தேடிவிளையாடியே அங்ஙனே நின்று
வாழு மயில் வீரனே செந்தில் வாழ்கின்ற
பெருமாளே"

அடியார்கள் உள்ளத்தில் "த்யானமூர்த்தி" யாக விளங்கு கின்றார்.

மணிதரளம் வீசி.........கதிர்காம பெருமாள்:—

கதிர்காமம் மிகச்சிறந்த திருத்தலம்; முருகன் தலங்களுள் மகிமை நிரம்பியது. அது ஈழநாட்டில் விளங்குவது. பிரமரந்திரஸ்தலம். இன்றும் பற்பல அற்புதங்கள் நிகழ இகபர சித்தி தருவது. எம்பெருமான் சூராதி யவுணர் களைக் கொல்லும் பொருட்டு தங்கியிருந்த பாடி வீடு. யுத்தகோலமாக நின்ற நிலை. அதனால்தான் கதிர்காமத்தில் சுவாமி தரிசனங் கிடையாது. திரையை வணங்குகின்ற னர். உருவவழிபாடு இல்லை. சிதம்பர ரகசியம்போல் பாவனையாகத்தான் வழிபாடு. அதனால் "ஞானமூர்த்தி"யாக விளங்குகின்றனர்.

அருவரைகள்.........அமர்பொருதவீர:—

இலக்கத் தொன்பான் வீரர்களையும் தாரகற்குத் துணைசெய்வான் மயக்கிய கிரௌஞ்ச வரையையும், நக்கீரரை கற்கிமுகி என்ற பூதத்தால் அடைபட்ட வரையையும் பெருமான் திருவேலால் துகள்படச் செய்தனர்.

தேவர்கட்குப் பல யுகங்களாக இடுக்கண் புரிந்து வந்த சூராதி யவுணர்களையும் அழித்தனர். ஆதலினால் அடியார்க்குச் சத்துருபயம் வாராது. அதனால் "வீரமூர்த்தி"யாக விளங்குகின்றனர்.

அரவுபிறை வாரி.........அமலர் குருநாத:—

"தவமே பயனைத்தரும்; பயனைத் தருவதற்கு பதி வேண்டுவதில்லை" என்ற கொள்கையை யுடைய தாருக வனத்து இருடிகள், சிவபெருமானை எதிர்த்து அபிசார வேள்வி செய்து, கொடும்பாம்புகளை உண்டாக்கி இறைவனைக் கொல்ல ஏவினர். கருணைக் கடலாகிய கண்ணுதற் கடவுள் அவ் விடப் பாம்புகளிடத்தும் இன்னருள் புரிந்து

அவற்றைக் கொல்லாது ஆபரணமாகத் தரித்துக் கொண் டனர்.

"விம்புடைய வன்முனிவர் வேள்விசெய்து விட்டகொடும்
பாம்பினைத்தும் தோளிற் பரித்தனையே"
—இராமலிங்க அடிகள்.

தக்கன் சாபத்தால் கலைகள் தேயப்பெற்று அஞ்சி எங்கும் புகலிடங் காணாது அரனரிடம் அபயம் புக, அவனை அஞ்சேலென்று சிரமேற்சூடி யருள்புரிந்தனர். உலகங்களை எல்லாம் அழிப்பேனென்று வந்த கங்கையை சடையிலடக்கி உயிர்கட்குத் தண்ணருள் புரிந்தனர். இங்ஙனம் அரவு, பிறை கங்கை இவற்றை முடித்துக்கொண்ட முழுமுதலாம் சிவபெருமான் சித்தங்குளிர மெய்ஞ்ஞானப் பொருளை முருகவேள் உபதேசித்தனர். அதனால் "ஞான மூர்த்தி"யாக விளங்குகின்றனர்.

இருவினை யிலாத.........இமையவர்குலேசா:—

இருவினை: நல்வினை, தீவினை. இரண்டுங் கெட்டா லன்றி இன்பந் தோன்றாது. நல்வினை புரியினும் உயர்ந்த பிறவி யெடுத்து பயனை யநுபவித்தே தீரவேண்டும். அது பொன்விலங்கு போன்றது. தீவினை இருப்பு விலங்கு போன்றது. தீவினையைச் செய்யாது விடுத்தும் நல் வினையை அர்ப்பணமாக பலாபேக்ஷயின்றி செய்தும் இருவினை யொப்பு என்ற நிலையை யடைதல் வேண்டும்.

தருவினைவிடாத என்பதற்கு கற்பக விருட்சத்தை விட்டு நீங்காதவர்கள் எனினும் பொருந்தும். தேவர்கள் பயங்கெடுத்து அவர்கட்கு வாழ்க்கையைத் தந்தாராதலின் "தியாகமூர்த்தி"யாக விளங்குகின்றனர்.

இருதனவிநோதா:—

பரஞானம், அபரஞானம் என்ற இரு ஞானங்களை யும் வள்ளியம்மையாருக்கு விளக்குவதே பொழுது போக் காகக் கொண்டு, உயிர்கள் இன்புறும் பொருட்டு இன்ப

சக்தியுடன் மருவுகின்றனர்; ஆதலின், போகமுத்தியுமாகி விளங்குகின்றனர்.

முருகப் பெருமானுடைய எட்டு பண்புகளை இப் பாடல் விளங்குகின்றது. வெறுந் துதியாகவும் அமைந் துளது. தொடக்கத்தில் இலக்குமியையும் இறுதியில் வள்ளிபிராட்டியாரையும் இடையில், பாடல், ஆடல், அருவி, வீரம், உபதேசம், கற்பகம் ஆகிய பல மங்கல மொழிகள் வருவதால் இப்பாடல் மிகவும் மேன்மை தங்கியது. பாராயணத்திற் குரியது. மங்கல காலங்களில் பாடற் கேற்றது.

கருத்துரை.

வள்ளியம்மையாருடைய கணவராகிய வடிவேற் பெருமான், திருமால் மருகராகவும், அறிவினலறியத் தக்கவராகவும், அடியார் உளத்தில் உறைபவராகவும் கதிர்காமக் கடவுளாகவும், அவுண குலகாலராகவும், சிவகுருநாதராகவும், தேவதேவராகவும் அறிந்து உய்க.

திருப்புகழ் ஸ்வரம்.

இராகம்: கரகரப்ரியா **ஆதி தாளம்.**

த நி ஸ் ஸ்	ஸ் ஸா ஸ்	ப த நி நி	நி தா ப.
தி ரு ம க	ளு லா வு	மி ரு பு ய	மு ரா ரி
ம ப த த	நி தா ப	ம ப த ப	பா ;
தி ரு ம ரு	க நா மப்	பெரு மாள்	காண்
ப த ப நி	த பா ம	ம ப ம த	ப மா க
ஜெ க தல	மும் வானு	மி கு திபெ	றுபாடல்
ஸ ரி ஸ ப	ம கா ரி	ஸ ரி ஸ நி	ஸா ;
தெரி த ரு	கு மா ரப்	பெருமாள்	கா ண்

உ

ஓம் குஹாய நம:

கந்தரலங்காரம்

(104-ம் பக்கத் தொடர்ச்சி)

(52) சிகராத்ரி கூறிட்ட வேலுஞ்செஞ் சேவலுஞ் செந்தமிழாற்
பகரார்வ மீ; பணி பாசசங்க் ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி துரங்க ந்ருபகுமரா
குகராட் சசபட்ச விட்சோப தீர குணதுங்கனே.

பதவுரை.

பாச - பாசக்கயிறு போன்றதும், சங்க்ராம - போர்செய்தற்குரியதுமாகிய, பணி பணாமகுட - பாம்பினுடைய படத்தின் மகுடங்களை, நிகராட்சம - பொடியாக்குதற்குரிய, பட்ச பட்சி துரங்க - சிறகுகளுடன் கூடிய மயிலை வாகனமாக வுடையவரே! ந்ருப - தலைவரே! குமரா - குமாரக் கடவுளே! குக - குகையில் வசிப்பவரே! ராட்சச பட்ச விட்சோப - அரக்கர்களின் பக்கத்தில் வெறுப்புள்ளவரே! தீர - தைரியமுடையவரே! குணதுங்கனே - தூய அருட்குணத்தை யுடையவரே! சிகர அத்ரி - சிகரங்களையுடைய கிரௌஞ்சமலையை கூறு இட்ட - பிளந்த, வேலும் - வேலாயுதத்தையும், செம் சேவலும் - செம்மையாகிய கோழிக்கொடியையும், செம்தமிழால் - செவ்வையாகிய தமிழ்மொழிப் பாடல்களால், பகர் ஆர்வம் ஈ - பாடித் துதிக்கின்ற விருப்பத்தை அடியேனுக்கு அளித்தருள்வீர்.

விரிவுரை.

சிகராத்ரி கூறிட்ட வேலும்:—

வேல் கிரௌஞ்சமலையைப் பிளந்ததுமன்றி, நக்கீரருக்காக கற்கிமுகிக்கு அனுகூலமாக இருந்த மலையையும் பிளந்தது.

"மலைதுளையுருவச் சென்ற வேலென"

—திருப்புகழ்.

[illegible] ; அது [illegible] குறிக்கும் [illegible] அறிவது [illegible]. வேல் என்பது [illegible].

[illegible] வேல் மறவேன்

—அநுபூதி.

[illegible]

[illegible]

[illegible]

[illegible] கொடியில் நின்று [illegible] இருள் [illegible] கூவுகின்றது.

[illegible] அருள்புரிய ஆறுமுகவள்ளல் வரும் [illegible] முன்னே தனது இனிய [illegible] அஞ்சலென ஆட்கொள்வது [illegible] ரூபமாகப் புலப்படுத்துவது, செம்மை [illegible] செவ்வண்ணமாக விளங்குவது.

செந்தமிழ்ப் பகர்வார்:—

"வேலாயுதத்தையும், சேவலையும் செந்தமிழ் மொழியால் துதிக்கும் விருப்பத்தை அடியேனுக்கு அருள்புரிவீர்" என்று சுவாமிகள் முறையிடுகின்றனர். கந்தரநுபூதி முதற்பாடலிலும்,

"ஆடும்பரி வேல் அணிசேவல் எனப்
பாடும்பணியே பணியா அருள்வாய்"

என்றனர்.

[illegible] ஆறுமுகக்கடவுள் வயலூரில் "மயிலையும் [illegible] வேலையும் சேவலையும், இரு [illegible] வயலூரையும் வைத்து [illegible] திருப்புகழைப் பாடுதி" என்று அருள்புரிந்தனர்.

பக்கரை [illegible] பொருதலின் [illegible]

[illegible]

பக்குவமலர்த் தொடையு மக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்
திக்குமதிக் கவருகுக் குடமும் ரட்சைதரு
சிற்றடியு முற்றிய பன்னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே.

வெடுகோதத் தெழு முவரி மாத்திறல்
கார்வேல் பாடேன் காடேன்விடா னாகூட
—திருப்புகழ்.

மொழிகளுள் சிறந்தது தமிழ்; எல்லா நலன்களும் பொருந்தியது; செம்மைப் பண்புடையது; இறைவனைப் போல் என்றும் ஒருபடித்தாகத் திகழ்வது; இளமையலங் குன்றாமல் இலகுவது. ஆதலினால் செந்தமிழ் என்றனர்.

"என்றுமுள தென்றமிழ்"
—கம்பர்.

"அம்புவி தனக்குள் வளர் செந்தமிழ் வழுத்தியுனை
அன்பொடு துதிக்க மனம் அருள்வாயே"
—திருப்புகழ்.

வேலாயுதத்தின் சிறப்பை வியந்து பாடும்பாடல்

தேரணியிட்டுப் புரமெரித்தான் மகன் செங்கையில்வேல்
கூரணியிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணியிட்டு வளைந்த கடக நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே.

சேவலின் சிறப்பைப் புகழ்ந்து பாடும் பாடல்.

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகையென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ள சலதிகிழிந்
தடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே.

வேலை வழிபடுவார்க்கு ஞானமும், சேவலை வழிபடுவார்க்கு அருட்பிரகாசமும் உண்டாகும்.

பணிபாச.........துரங்க:—

பாசம் போன்றதும் போர்புரிய வல்லதுமாகிய பாம்பு

னுடைய பஞ்சமகுடங்களை மயில் துகள்படுத்துகின்றது என்பார்.

துரங்கம் - குதிரை. அது உவம ஆகுபெயராக மயிலைக் குறிக்கின்றது.

"பட்சியெனு முக்ரதுரகம்"
"ஒகாரபரி" என்பர் பிற இடங்களிலும்.

நிருப:— நிருபன் - தலைவன்.

முருகனே முழுமுதற் பரம்பொருள்.

இனி நிருபகுமரா என்பதை ஒரு தொடராக்கி நிருபனுடைய குமாரரே என்றும் கூறலாம். அவ்வாறு கொள்ளின் நிருப என்பது சிவபெருமானைக் குறிக்கும்.

குக:—

குமரவேள் குறிஞ்சிநிலக் கடவுளாதலின் மலைக்குகைகளில் வசிப்பாராயினர். அதனால் குகனெனப் பட்டனர்.

ஆன்மாக்களின் தகராகாச புண்டரீகக் குகையில் வசிப்பதால் குகன் என்பது அதன் சிறப்புப் பொருள்.

"அணோரணீயான் மஹதோ மஹீயா நாத்மா குஹாயாம்"

ராட்சச பட்ச விட்சோப:—

அமரர்கட்கு ஆற்ெறுணா அல்லல் இழைத்த அரக்கர்களை அறுமுகப்பரமன் அழித்தனர்.

சமதமாதி நற்குணங்களை யடக்கும், ராகத்வேஷாதி துர்க்குணங்களைப் பெருமான் அழிப்பன் என்பது அதனுடைய குறிப்பு.

"நிருதரார்க்கொரு காலா ஜேஜேய"
—திருப்புகழ்.

அருணகிரி சுவாமிகள் தமிழில் வல்லவர் என்பது மட்டுமின்றி வடமொழியிலும் கரைகண்டவர். பல இடங்களில் வடமொழிப் பதங்களின் அரும் பிரயோகங்கள்

உ

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

இடும்பனுக் கருளிய வரலாறு

(88-ம் பக்கத் தொடர்ச்சி)

"இடும்பற் கருள்சேய் திடும்பங் கயங்கண்
டிடும்பைக் கிடும்பைதரு வாம்"

செந்தமிழ் என்னும் செழும்பயிர் விளைத்து அறியாமை யென்னும் அரும்பசி தொலைத்த அருந்தவ முனிவர் அகத்தியர். "சிவஞானிகர் பொதியவரை முனிவன்" என்று அருணகிரியாரால் பாடப்பெற்ற தவராஜ செல்வர். அவருடைய ஒருகரம் சிறிது கவிழ்தலால் விந்தகிரி பாதலம் புகுந்தது; அக்கரம் நிமிர்தலால் எழுகடலும் வரண்டது. இத்தகைய தமிழ் முனிவர் கந்தமலைச் சிகரங்களுள் சிறந்தனவாகிய சிவகிரி சத்திகிரி என்னும் இரு சிகரங்களையும் சிவமும் சத்தியுமாகப் பாவித்து வழிபட்டனர். அங்ஙனம் வழிபாடு முடிந்தபின் எந்தை கந்தவேளைத் தொழுது

வருகின்றன. இப்பாடல் 30 பதங்களால் ஆகியது. இதில் 13 பதங்கள் தமிழ். 17 பதங்கள் வடமொழி.

சிகர, அத்ரி, பாச, சங்க்ராம, பணு, மகுட, நிகராட்சம, பட்ச, பட்சி, ந்ருப, குமரா, குக, ராட்சச, பட்ச, விட்சேப, தீர, குண என்பன.

கருத்துரை.

மயில்வாகனரே! குமாரமூர்த்தியே! குகக்கடவுளே! அசுர குலகாலரே! அருட்குணக் கடலே! தேவரீருடைய வேலாயுதத்தையும் சேவலையும் அன்புடன் தமிழால் துதிக்க அருள் புரிவீர்.

"எம்பெருமானே! இரு சிகரங்களையும் நாயேன் பொதிய மலைக்குக் கொண்டு செல்ல விரும்புகிறேன்; அருள்புரிவீர்" என்று வேண்டினர். அறுமுக வள்ளல் அவ்வாறே அருள் புரிந்தனர். அகத்தியர் அவற்றைப் பெயர்த்துக் கொண்டு பூவுலகம் வந்தனர். பூர்ச்சவனம் என்னும் தலம் கேதாரத்திற்கு ஈசான திக்கில் விளங்குவது. அங்கு அவற்றைத் திருவருள் தூண்ட வைத்துப் பொதியை நோக்கி வருவாராயினர்.

சூரபன்மன் முதலியோருக்கு வில் வாள் முதலிய வித்தைகளைப் பயிற்றிய இடும்பன் என்னும் அசுரன் முருகப் பெருமானால் சூராதி யவுணர்கள் யாவரும் அழிந்தமையால், தன் மனைவியான இடும்பியுடன் மகேந்திரபுரியை விடுத்து வடக்குநோக்கி முருகவேளைச் சிந்தித்துக் கொண்டு வருவானாயினன். கோயிலூருக்கு தென்கிழக்கே பத்துமைலில் இறைவனைப் பூசித்தனன். (அது இப்போது இடும்பாவனம் என்று வழங்குகின்றது) கன்றுப்பூரிலும் பெருமானை வழிபட்டு சிறந்த உறுதியும் ஒழுக்கமும் உடையனாய் முருகவேளை நினைந்து உருகிக்கொண்டு வருங் காலத்தில் அகத்திய முனிவரைச் சந்தித்து அவரடியிற் பணிந்து, "சுவாமி! அடியேன் சூராதியசுரர்கட்கு வில்லாசிரியன்; அவர்கள் அனைவரும் அழிந்தமையால் அறுமுகப் பெருங்கருணை யாண்டவனுக்கு அடிமைப்பட்டு உய்யு நெறி தேடி அலைகின்றேன். நாயேனை ஆட்கொண்டு அருள்வீர்" என்று குறையிரந்தான். அகத்தியர் அவனுக்கு அருள்புரிந்து, திருவெண்ணீற்றை நல்கி, சடக்கர மந்திரத்தை உபதேசித்து, பூர்ச்சவனத்து வைத்து வந்த சிவகிரி சத்திகிரிகளை எடுத்து பொதிகைக்கு வருமாறு கட்டளையிட்டு, அதற்குரிய வழிகளையும் அச்சிகரங்களின் பெருமையையும் உணர்த்தி யனுப்பினர்.

இடும்பன் தன்மனைவி இடும்பி என்பாள் காய்கனி கிழங்குகளைத் தந்து உபசரித்துவர, அகத்திய முனிவர் கூறிய வழிச்சென்று, ஆங்காங்குள்ள திருத்தலங்களைச் சேவித்துக் கொண்டு, பூர்ச்சவனம் சேர்ந்தான். அங்குள்ள

சிவகிரி சத்திகிரிகளைக் கண்டு அடங்காத ஆனந்தத்துடன் பணிந்தான்; "இனி இதனை எடுத்தேகுவேன்" என்று துணிந்தான். தன் மனைவியுடன் பயபக்தியோடு அம்மலைகளைப் பூசித்தான். அகத்திய முனிவர் திருவருளால் பிரமதண்டமும் அட்ட நாகங்களும் அருகணைந்தன. அதனைக் கண்ட இடும்பன் அதிசயித்து அட்ட நாகங்களையும் உறிபோலச் செய்து பிரமதண்டத்துடன் பிணித்து இரு மலைகளையும் எடுத்து "முருகா" என்று முழந்தாளை யூன்றி காவடியாகக் கொண்டு தென்திசை நோக்கி வந்தான். மல்லிகார்ச்சுனம், காசி, காளத்தி, திருவருணை, பழமலை முதலிய திருத்தலங்களைச் சேவித்துக் கொண்டும், ஆங்காங்கு காவடியை இறக்கி உணவுண்டு இளைப்பாறிக் கொண்டும் சென்னிமலைக்கு வந்து சேர்ந்தான்.

அன்பினர்க்கு முருகுறைசல நேர்ந்து
மின்பொலி நன்முது குன்றினை மேவி
இன்புறு காவிரி யாறு கடந்து
பொன்பொல * புட்ப கிரிப் புறத்துற்றான்.

அங்கு வந்ததும் வழிதெரியாது திகைத்தான்; "முருகா! மூவர்முதல்வா! வழியறியாது வாடுகின்றேன்" என்று சற்று மனங் கவன்றான். அங்கு முருகப் பெருமான் ஓர் அரசிளங் குமரனைப்போல் தோன்றியருளினார்.

செச்சை கமழ்ந்து சிறந்துயர்தோளும்
கச்சையில் வாளொடு கட்டு மருங்கும்
பிச்சி நறுந்தொடை செய்சிகை வாய்ப்பும்
வச்சிர மாலை வயங்கு பொன் மார்பும்.

தொட்டிடு தோற்கழல் சூழிரு தாளும்
மட்டவிழ் செங்கையில் வாளியும் வில்லும்
கட்டெழின் மீறிய காவலவன்போற்
கிட்டினன் ஞேகை கிடைத்தெதிர் நின்றான்.

இத்தகைய கட்டழகுடைய இளங்குமரனை இடும்பன் நோக்கி, "அடியேன் செய்த அருந்தவமே ஓருருவ

---

* புட்பகிரி – சென்னிமலை. பெருநல்லார் சிறுநல்லார் பொருட்டு பூமழை பொழிந்ததால் இப்பெயர் பெற்றது.

மாக இப்படி என்னெதிரே வருகின்றதோ? மாதொரு பாகனும் மகாதேவனோ? மலர்மகள் கொழுநனோ? நான்முகனோ? இந்திரனோ? மதனனோ? என்னையாளுடைய எந்தை கந்தவேளோ? அரசகுமாரனோ? ஆரோ அறிகிலேன். என் உள்ளம் உருகுகின்றது" என்று எண்ணினான். "ஐயா! நீர் யார்? உமக்கு வந்தனம்" என்று வினவினான். பெருமான் "அப்பா! நான் ஓர் மன்னன்மகன்; வேட்டையாட வந்தனன். நீ அசுரர் தலைவனைப்போல் காண்கின்றனை. நெடுந்தொலையிலிருந்து வந்தனை போலும். இம்மலைகளை எடுத்து எங்கு போகவேண்டும்" என்றனர். "ஐயா! அகத்திய முனிவர் ஆணைப்படி இதனைப் பொதியமலைக்கு எடுத்து ஏகுகின்றனன். அவர் கூறிய வழிதவறி இங்கு அடைந்தேன். இம்மலைமேல் ஏறி வரும்போது நின்னைக் கண்டேன். எனக்கு வழி சொல்லி உதவியருளும்" என்றான். பெருமான், அன்பனே! வருந்தற்க. வழிகாட்டுவன்; இது சென்னிமலை. புட்பகிரி யென்றும் கூறுவர். இம்மலையின்மீது குமரவேள் வசிப்பர். இவ்வழியே சென்று வராகமலை யடைந்து அங்கிருந்து பொதிகைக்குப் போதி" என்று கூறி மறைந்தருளினார். இடும்பன் வராகமலை வழியே சென்று திருவாவினன்குடி அடைந்ததும், திருவருளால் மலைகள் பாரமாகத் தோன்ற, காவடியை இறக்கி, சற்று இளைப்பாறினான். வாமதேவமுனியாச்சிரமஞ் சென்று இடும்பி யுதவிய காய்கனிகளைத் தின்று, பின் மலைகளைத் தூக்க முயன்றான். எத்துணை முயன்றும் மலைகளை எடுக்க முடியாமல் வருந்தினான். சிவகிரியின்மீது ஒருபுறம் குராமர நிழலில் மழமுதிர்ந்த செங்கனிவாய்ச் சிறுவனொருவன் நிற்பக் கண்டான். இவன் இயக்கனோ? சித்தனோ? என்று ஐயுற்றான். அருகிற் சென்று, "குழந்தாய்! நீ இங்கு தனித்து நிற்பது எதற்கு? வழிதப்பி வந்தனையோ? இவ்விடம் விட்டு நீங்கிப்போ" என்றனன். முருகன் யாதொன்றும் பதில் கூறாது நகைத்தார். இடும்பன் சினந்து "ஓய் மைந்த! விரைவில் விலகுதி" என்றான். முருகவேள் "அசுர! இது நமது இருக்கை

யாகும். ஆற்றலுண்டேல் எடுத்துப் போதி" என்றார். இடும்பன் "நன்று நன்று. நீ மாயத்தின் வல்லவன் போலும். திருமாலைச் சிவலிங்கமாக்கிய அகத்தியருடைய அடியன் என்று என்னை நீ உணராய் போலும். இப்போது உனக்கு அழிவுகாலம் வந்துவிட்டது" என்று கூறி, கண்களில் கனற்பொறி சிந்த குராவடியில் நிற்கும் குழந்தைமேல் பாய்ந்தான். முருகவேள் தண்டோ வேறுயாதோ அவனை அடர்த்தது. அதனுடன்கூட முகடுபிளக்க ஓவென்றலறி கீழ் விழுந்து மாய்ந்தான். பிரமதண்டும் அட்டநாகங்களும் அஞ்சி யகன்று அகத்தியருக்கு நிகழ்ந்ததைக் கூறி இருக்கை புக்கன. கணவன் மாண்டதைக் கண்ட இடும்பி குராமரக் குமரனைப் பணிந்து பதைத்துருகி புலம்பி "எந்தையே என் கணவனை யுயிர்ப்பித்து மங்கலியப்பிச்சைக் கொடுத் தருளவீர்" என்று வேண்டி யழுதாள். உடனே கணங்கள் சூழ மங்கல முழவம் முழங்க முருகவேள் மயில்மிசைவந்து காட்சி தந்தருளினார். கந்தவேள் கடைக்கணோக்கால் இடும்பன் உயிர்த்து எழுந்து பெருமான் திருவடியில் வீழ்ந்து பாடியாடிப் பரவினான். ஞானதண்டாயுதபாணி, இடும்பனை நோக்கி "அடியனே! இம்மலை இங்ஙனமே தங்குக. நீ இம்மலைக்கணிருந்து சிறப்புறுதி; உன்போல் காவடிகொண்டு இங்கு யாவரும் வந்து வழிபாடு செய்க. அங்ஙனம் காவடி கொண்டுவருவோர் உன்னை முதலில் வழிபடக் கடவர். உனக்கு நமது திருவருள் முழுவதும் முன்னின்றருளும்" என்று அருள்புரிந்து மறைந்தனர். இடும்பன் அப்பழநிமலைக்கண் இன்றும் இருந்து விளங்குகின்றனன். அருகேயுள்ள குமாரமூர்த்தியே குராமரத்தின் கீழ் நின்றவர். அன்பர்கள் வழிபட்டு அருள்பெறுவார்களாக.

(தொடரும்)

முருகா

கற்பு.

கஜலக்ஷ்மியும் கருணாகரனும் கருத்தொருமித்த தம்பதிகள். அவர்களுக்குள் ஒருபோதும் மனமாறுதல் வந்ததே இல்லை. ஒருவரை யொருவர் உள்ளூற அன்பு செய்தனர். அவர்கள் வாழ்வு புனிதவாழ்வாகப் பொலிவுற்றது. அவர்கள் ஊர் ஜோதிபுரி; அது யமுனாநதிக்கரையில் மிக்க அழகுடன் விளங்கியது. நல்ல சோலைகளும், நறுமலர் வாவிகளும் செய்குன்றுகளும் சூழ்ந்திருந்தன. கஜலக்ஷ்மி சிறந்த கட்டழகுடையவள். கரிய மேகத்திற்கு நடுவே பூர்ணசந்திரன் ஒளி செய்வதுபோல் கூந்தலுக்கு நடுவே முகமண்டலம் விளங்கியது. தாமரைக்கு இடையில் நீலோற்பலம் இரண்டு பூத்ததுபோல் முகத்தில் கண்களிரண்டும் கவின் செய்தன. அழகின் கொழுந்துபோல் இலகினள். நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு ஆகிய நற்குணங்களும் கற்பு நெறியும் அவளுக்கு அணிகலன்களாக அமைந்திருந்தன.

கருணாகரன் தனக்குக் கஜலக்ஷ்மி மனைவியாகக் கிடைத்தமையால் தன்னை பாக்கியசாலியாக நினைத்து மனமகிழ்வான். அவர்களுடைய ஒற்றுமையான வாழ்க்கையைக் கண்டு அவ்வூரார் சிறிது பொறாமை யடைந்தனர். கருணாகரனுக்குப் போதிய வருவாயில்லை. சிறிய வருவாய்தான். ஆனால் கஜலக்ஷ்மி "பெற்றதே கொண்டுவப்பாள்" என்றபடி சிக்கனமாகக் குடும்பத்தை நடாத்தி வந்தனள். அவசியமில்லாத செலவுகளைச் செய்வதில்லை. அவள் திறமையால் வறுமையும் பெருமை யுற்றது.

அந்த ஜோதிபுரியில் மண்டூகன் என்ற ஒரு தனவந்தனிருந்தான். அவன் துர்க்குணக் குவியல். கொலை, புலை, பொய், வஞ்சனை முதலிய யாவும் அவனுக்கு அணிகலன்கள். ஒருநாள் கஜலக்ஷ்மி முருகப்பெருமான் திருவாலயம் போய் திரும்பி வீட்டிற்கு வந்துகொண்டிருந்தாள். ஒரு பொற்பதுமை நடப்பது போல் காணப்பட்டாள். மண்டூகன் எதிர்ப்பட்டான். அவளைக்

கண்டதும் அவனைக் காமப்பேய் பிடித்தது; தலை சுற்றியது. அறிவை யறவே யிழந்தான். கருணாகரன் மனைவி யென்று பிறரால் அறிந்துகொண்டான். அவளைப் பின் தொடர்ந்தான். ஒரு தெருவின் மூலையில் வரும்போது ஆங்கு ஒருவருமில்லை. கனைத்தான்; கஜலக்ஷ்மி திரும்பி பார்த்து உள்ளம் நடுங்கி சற்று வேகமாக நடந்தாள். மாலை மணி 7 இருக்கும். மண்டூகன், "எங்கு போகின்றீர்? நில்லும்" என்றான். கஜலக்ஷ்மி ஒன்றும் பதிலளிக்காமல் நடந்தாள். "என்னை நீ தெரிந்து கொள்ளாமல் போகின்றாய். உன்னை விரும்பிய என்னைப்பார்; என்னை சாமானியமாக நினைக்காதே. என்றால் உனக்கு அநேக அநுகூலம் உண்டு. ம்... நில்லு" என்றான். கஜலக்ஷ்மி உடலும் உள்ளமும் நடுநடுங்கி முருகவேளைத் தியானித்த வண்ணம் மேலும் வேகமாக நடப்பாளாயினாள். மண்டூகன் "அட அசடே! உன் வாழ்வின் வாயில் மண்ணைப் போட்டுக் கொள்ளாதே" என்று கடிந்துரைத்தான். கஜலக்ஷ்மி "முருகா! இந்த வேளையில் என்னைக் காப்பாற்றுவாய். கருணாநிதி! உன்னைத் தவிர வேறு துணையில்லை" என்று துதித்தாள். முருகனருளால் அங்கு ஒரு மணமக்கள் ஊர்வலம் வந்தது. கஜலக்ஷ்மி அந்தக் கூட்டத்தில் நுழைந்து புலியின் வாயிலிருந்து தப்பிய மானிளம் பிணைபோல் வீடு சேர்ந்தாள். அவள் உள்ளம் நெடுநேரம்வரை நிலைகுலைந்து பதறியது.

மண்டூகன் எப்படியும் அவளை வசப்படுத்த வேண்டுமென்று எண்ணி, அதற்குரிய வழி யாது என்று சிந்தித்தான். கருணாகரன் ஏதோ காரியமாக வெளியூர் போயிருந்தான். மாலைநேரம், கஜலக்ஷ்மி வீட்டுக்குமுன் தண்ணீர் தெளித்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். அவ்வழியே சென்ற மண்டூகன் கருணாகரன் ஊரில் இல்லை என்பதைத் தெரிந்திருந்தானாதலின் தைரியமாகக் கனைத்தான். கஜலக்ஷ்மி பயந்து சரேலென்று வீட்டிற்குள் போய்விட்டாள். மண்டூகன் சிறிதும் பழியும் பாவமும் பாராதவன். வீட்டிற்குள் தானும் நுழைந்தான். கஜலக்ஷ்மி அவன் வீட்டில் அச்சமின்றி வந்ததைக் கண்டு நடுநடுங்கினாள். எனினும் அந்த சமயத்தில் அவனை எதிர்த்தால் தன்னைப் பலவந்தப் படுத்தினாலும் படுத்துவன். அதனால் தன் கற்புக்கு மாசுவரக்கூடும் என்று எண்ணினாள். ஒரு கணத்துக்குள் தந்திர மொன்றைச் சிந்தித்து "வாருங்கள், நமஸ்காரம். நீங்கள் அன்று நடுவீதியில் பேசினதை யாராவது பார்த்துவிட்டால் பெரிய பழிவந்து சேருமே

என்றுதான் பயந்து வந்துவிட்டேன். அடுத்த வீட்டிலிருந்து அந்த அம்மா அடிக்கடி வருவாள். அப்படி வந்துவிட்டால் விஷயம் வெளியாகிவிடும். போய் தெருக்கேட்டுக் கதவையும், நடைக்கதவையும் தாளிட்டு வந்து விடுங்கள்" என்றாள். மண்டூகன் இப்படி இசைவாள் என்று சொப்பனத்திலும் எதிர்பார்க்கவில்லை. மிக்க சந்தோஷமுடையவனாகி, தனது அதிர்ஷ்டத்தை எண்ணி தலையை யசைத்தான். உடனே அவள் கூறுவது உண்மை என்று எண்ணி போய் தெருக்கேட்டுக் கதவை தாளிட்டான். அதற்குள் கஜலக்ஷ்மி ஓடி அதற்கு அடுத்துள்ள நடைக்கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டாள். மண்டூகன் அதுகண்டு தான் ஏமாந்து போனதற்கு உள்ளம் நாணி கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விட்டதே என்று ஏங்கி ஒன்றும் செய்யத் தோன்றாதவனாய் வருத்தத்துடன் சென்றான்.

மறுநாள் காலை கஜலக்ஷ்மி தெருக்கூட்டும்போது ஒரு கடிதச் சுருள் கிடைத்தது. அதில் கீழ் வருமாறு எழுதியிருந்தது.

"பெண்மணி!

நீ என்னை ஏமாற்றியதை இந்தவிசை மன்னித்தேன். நீ என் விருப்பத்திற்கு இணங்கவில்லையாயின் உன் வாழ்வின் தலையில் இடிவிழும். உன் கணவன் ஒரு உதவாக்கரை. அவன் வெறும் ஆள். என்னை நீ விரும்பினால் இந்திர போகத்தை யநுபவிக்கலாம்" இதுதான் இறுதி வார்த்தை.

இப்படிக்கு,

உன்னை மனப்பூர்வமாக விரும்பும்,

மண்டூகப்பிள்ளை.

இக்கடிதத்தைக் கண்ட கஜலக்ஷ்மி கண்ணீரால் நனைந்தாள். முருகனை நினைந்தாள். "அடியார் அல்லலை யகற்றும் ஆண்டவனே! உன் திருவருள் துணைசெய்ய வேண்டும்"

கையுஞ் சலியாதோ கண்பஞ் சடையாதோ
வையு நாவிற்புழுவும் வையாதோ—நையும்
படி நமனும் வாரானோ ஞானவே லாஇப்
படியிங் கெழுத பவர்க்கு.

என்று வேண்டினாள், அக்கடிதத்தை ஒருபுறம் பத்திரப்படுத்தி வைத்தாள்.

ஒருநாள் இரவு 7-30 மணி இருக்கும். மண்டூகன் யமுனா நதிக்கரையில் உலாவிவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்தான். அங்கு அடர்ந்த தோப்பு. நடுவில் ஒரு மனிதன் வெட்டுண்டு கிடந்தான்; மண்டூகன் உற்று நோக்கினான். வெட்டுண்டவன் அந்த ஊரில் ஒரு பெரிய கோடீஸ்வரனாகிய சங்கர்லால் என்று தெரிந்தான். அவர்மீதுள்ள நகையை விரும்பி நிகழ்ந்த நிகழ்ச்சியென்று உணர்ந்தான். கஜலக்ஷுமி விஷயமாகத்தான் எண்ணிய எண்ணத்தை நிறைவேற்றுதற்கு இதுவே சமயம் என்று மோசமான கருத்தைக் கொண்டான். தலையற்ற உடம்பைப் புரட்டிப் பார்த்தான். நகையின்பொருட்டு வெட்டிய கள்வர்கள் உடம்பிலுள்ள எல்லா நகைகளையும் கழற்றியபோது விரல்களில் 2 மோதிரங்கள் கழற்ற முடியாமையால் அவசரத்தில் விடுத்தேகினர். அவற்றை மண்டூகன் கண்டு சிரமப்பட்டுக் கழற்றிக் கொண்டான். ஏதேதோ சூழ்ச்சியான எண்ணங்கள் அவன் மனதில் தோன்றின.

இரவு 12 மணிக்கு ஒருவருமறியாமல் தலையையும் உடம்பையும் கொண்டுபோய் கருணாகரன் வீட்டுத் தோட்டத்தில் புதைத்து விட்டான். மறுநாள் காலை கருணாகரன் வீட்டு வேலைக்காரியை அழைத்து, அந்த இரண்டு மோதிரங்களையும் அவளிடம் கொடுத்து "இதை நீ வேலை செய்யும் வீட்டு எஜமானன் கருணாகரன் பெட்டியில் ஆரு மறியாவண்ணம் வைத்துவிடு; அதற்குப் பரிசாக இந்த 10 ரூபாயை வைத்துக்கொள்; ஒருவருக்கும் தெரியக் கூடாது. வைத்துவிட்டு எனக்குத் தகவல்சொல்லு" என்று ரூபாய் 10 ம் மோதிரங்களையும் தந்தான். அவள் அவற்றைப் பெற்றுக்கொண்டு "அப்படியே செய்கிறேன்" என்று கூறி, கருணாகரன் வீட்டிற்கு வந்து, அவருடைய பெட்டிகள் ஒன்றில் அம்மோதிரங்கள் இரண்டில் ஒன்றை வைத்துவிட்டு, ஒன்றை தான் எடுத்துக்கொண்டாள். மண்டூகனிடமும், மோதிரத்தை வைத்துவிட்டதாகக் கூறிவிட்டாள். தன் எண்ணம் பலித்துவிட்டதாக மண்டூகன் எண்ணி மகிழ்ந்தான்.

சங்கரலால் காணமல்போனது குறித்து ஊரெங்கும் பரபரப்பு உண்டாயிற்று. உற்றாரும் மற்றாரும் போலீஸாரும் நாலா பக்கங்களிலும் தேடுவாராயினார்கள். சங்கரலால் பெருந் தன

வந்தராதலால் அவரைத் தேடுவதில் மிக்க ஊக்கமெடுத்தனர். புலன் ஒன்றும் அகப்படவில்லை. எங்கும் ஒரே குழப்பம்.

மண்டூகன் போலீஸ் அதிகாரி D. S. P. அவர்களுக்கு அடியிற் கண்டவாறு ஒரு கடிதம் எழுதியனுப்பினான்.

ஐயா!

நகையை யபகரிக்கும் பொருட்டு சங்கரலாலை கருணாகரன் என்பவன்தான் கொன்றான். சங்கரலாலின் பிணம் கருணாகரனுடைய வீட்டின் தோட்டத்தில் வாழைமரத்தடியில் புதைக்கப் பட்டுளது. அவருடைய நகைகளும் அவன் பெட்டியில்தா னிருக்கும். சோதித்து உண்மையைக் காண்க.

இப்படிக்கு,
மெய்விளம்பி.

இக்கடிதத்தை D. S. P. கண்டார். திடுக்கிட்டார். கருணாகரன் அந்த ஊரிலேயே நல்லவன் என்பது அவருக்குத் தெரியும். எனினும் பணத்தாசை யாரைத்தான் கெடுக்காது என்று எண்ணி, உடனே போலீஸாருடன், கருணாகரன் வீட்டிற்குச் சென்றார். கருணாகரன் பூஜை செய்து கொண்டிருந்தான். கஜலக்ஷ்மியும் கருணாகரனும் D. S. P. அவர்களைக் கண்டு சற்று கலங்கினார்கள். D. S. P. நேரே தோட்டத்தில் போய் வாழைமரத்தடியில் தோண்டினார். பிணம் கிடைத்தது. அது கண்டு கருணாகரனும் கஜலக்ஷ்மியும் திகைத்தார்கள். உடனே D. S. P. கருணாகரனை குற்றவாளி என்று எண்ணி "அடே! பாவி பாழும் நகைக்காக பெரிய கோடீஸ்வரனைக் கொன்றனையே! சண்டாளா! கொலை பாதகனாகிய உனக்கு பூஜை வேறு வேண்டுமா?" என்று வைது கையில் விலங்கு பூட்டினார். அவனுடைய பெட்டிகளை சோதனை செய்தனர். சங்கரலால் மோதிரம் ஒன்று கிடைத்தது. அதனால் சந்தேகம் பலப்பட்டது. உடனே கருணாகரனை சிறைப்படுத்தினார். கருணாகரன் சங்கரலாலைக் கொன்றுவிட்டான் என்ற செய்தி ஊரெங்கும் காட்டுத் தீயைப்போல் பரவியது. கருணாகரனை வைதவர் பலர்; "கருணாகரன் அப்படி செய்திருக்கமாட்டான்" என்று பேசினவர் சிலர்.

விசாரணைஸ்தலத்தில் ஏராளமான கூட்டம். கருணாகரனை விசாரித்தனர். அவன் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று பல

சத்தியங்களைக் கூறினேன். ஏழைசொல் அம்பலம் ஏறுமா? மோதிரம் அவன் பெட்டியில் இருந்ததே பெரிய சாட்சி. கருணாகரனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. 8 நாளில் அவன் உயிர் பிரியும் என்ற செய்தியைக் கேட்ட கமலக்ஷ்மிக்கு இருந்த துன்பத்தை யாரால் சொல்லவும் எழுதவும் முடியும். துன்பசாகரத்துள் அழுந்திவிட்டாள். "முருகா! முருகா! ஒரு பாவமும் அறியாத என் கணவனுக்கு இந்த விதி நேர்ந்ததே. ஏழைகட்கு உன்னைத் தவிர வேறு துணை யார்" என்று புலம்பினாள். மண்டூகன் செய்த மதிமோசம் என்று எண்ணி அவன் எழுதிய கடிதத்தை எடுத்துக்கொண்டு போலீஸ் அதிகாரியிடம் ஓடி வருகின்றாள்.

மோதிரத்தில் ஒன்றை எடுத்துக்கொண்ட வேலைக்காரி தன் மகனுக்கு அதைக் கொடுத்து உள்ளம் உவந்தாள். அவள் மகன் பெரிய சூதாடி. சூதாட்டத்தில் அம்மோதிரத்தை தோற்றான். போலீஸ் அதிகாரிகள் அந்த சமயம் சூதாடும் அத்தனைபேரையும் பிடித்துக் கொண்டுபோய் D S P. இடம் நிறுத்தினார்கள். D. S. P. அம்மோதிரத்தைப் பார்த்து சங்கரலானுடைய மூன்றெழுத்து அதில் செதுக்கி இருக்கக் கண்டு திகைத்தார். உடனே அவனை நிறுத்தி "இம்மோதிரம் ஏது? உயிர் போகுமுன் சொல்லு" என்று மிரட்டிக் கேட்டார். அக்கயவன் "என் தாய் எனக்குத் தந்தாள்" என்றான். உடனே அந்த வேலைக்காரியைப் பிடித்துவரச் செய்து, அவளைப் பார்த்து, "இந்த மோதிரம் ஏது? உண்மையைச் சொல்லு. உன் மகன் உயிர் நிலைபெற வேண்டுமாயின் ஒளியாமற் சொல்லு" என்றார். அவள் "ஐயா! என் மகனை ஒன்றும் செய்துவிடாதீர்கள். மண்டூகம்பிள்ளை இரண்டு மோதிரத்தை என்னிடம் தந்து கருணாகரன் அவர்கள் பெட்டியில் வைக்கச் சொல்லி ரூபாய் 10 எனக்குத் தந்தார்கள். நான் ஒன்றை வைத்துவிட்டு ஒன்றை என் மகனுக்குக் கொடுத்தேன். இதுதான் நடந்தது" என்றாள். உடனே அதிகாரிக்கு கருணாகரன் குற்றவாளியன்று என்றும் மண்டூகன் செய்த சூழ்ச்சி என்றும் புலப்பட்டது.

அதே சமயம் கமலக்ஷ்மி ஓடி அவர்காலில் வீழ்ந்து அழுது மண்டூகன் தனக்கு எழுதிய கடிதத்தைக் காட்டி, என் கணவனைக் கொன்றுவிட்டால் நான் அவன் வசப்படுவேன் என்று அப்பாவி செய்த சதி" என்று புலம்பி முறையிட்டாள். உடனே அதிகாரி தனக்கு மெய்விளம்பி என்ற கையெழுத்திட்டுவந்த கடிதத்

எழுத்தும் கஜலக்ஷ்மிக்கு மண்டுகன் எழுதிய கடிதத்தின் கையெழுத்தும் பார்க்க ஒத்திருந்தது. மண்டுகனை விலங்கிட்டு கொணர்ந்து, அவனுடைய மற்றைய எழுத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்த்தனர். எல்லாம் பொருந்தி யிருந்தது. உடனே குற்றவாளி மண்டுகனே என்று தீர்மானிக்கப் பட்டது. மண்டுகன் மரண தண்டனை யடைந்தான். தன்மோசந் தன்னையே கெடுத்ததற்கு எண்ணி எண்ணி ஏங்கி இயமனூர்க்குப் புகுந்து நரகில் அழுந்தினன். கருணாகரன் விடுதலை யடைந்தனன். ஊரார் எல்லோரும் மண்டுகனை ஏசி கருணாகரனையும் கஜலக்ஷ்மியின் கற்பின் மாண்பையும் புகழ்ந்து பேசி மகிழ்ந்தனர்.

கஜலக்ஷ்மி தனக்கு வந்த பேராபத்தை நீக்கிவைத்த முருகப் பெருமானை வாழ்த்தி கணவனுடன் இனிது வாழ்ந்தாள்.

நன்றி மறவாமை.

மக்கள் ஒருவர்க்கொருவர் உதவிபுரிவது நன்றி (உபகாரம்) அதை மறவாதிருத்தலே நன்றி மறவாமை. மறவாமை - (நன்றி) அறிதல். அறிதல் - மதித்தல்.

பசுவினது மடியை அறுத்த தீவினையாளர்கட்கும், பெண்களின் கருவை அழித்த பாதகர்கட்கும், முனிவர்களைக் கொன்ற கொடுமையாளர்கட்கும் தங்கள் பாவங்களினின்றும் நீங்கி உய்வுபெறுவதற்கு வழிகள் உண்டு. நன்றி மறந்தவர்கட்கு உலகம் கீழ்மேலாக மாறினும் உய்வு பெறுவதற்கு வழி இல்லை.

"ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
வழுவாய் மருங்கில் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வதாயினும ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தியில் லென
வறம் பாடிற்றே" —புறநானூறு.

இன்னும் அன்பிற் சிறந்த தாயையும், தந்தையையும், குருவையும், முனிவர்களையும், பசுவையும், குழந்தைகளையும், பெண்களையும் கொன்றவர்கட்கும் பாவநீக்கம் உண்டாம். நன்றி மறந்தவர்கட்கு பாவத்தை ஒழிக்கும் உபாயம் ஒன்றுகூட இல்லையாம். நன்றியறிதல் தலையாயது. நன்றிமறந்தவர் சந்தானத்தையும் இழப்பர். நம்து தமிழன்னையும் "நன்றி மறவேல்" என்று கூறி வலியுறுத்தினார்.

வே. ஆ. தணிகாசலம்.

உ

சேயோன் க்ஷேத்திரக்கோவை.

சிந்தைக் குகந்ததென் தணிகையிற் செங்கல்வ ராயனுய்ச் சேர்ந்துநின்ருய்
தெள்ளறிஞர் சேர்வள்ளி மாமலையிலே வள்ளி சேர்ப்பனுய்த் திகழ்நின்ருய்
சீகாஞ்சி குமரகோட் டத்தே தவக்கோல சீலனுய்த் திகழுகின்ருய்
தெய்வ ஆண்டார்குப்ப மதனிலே பிரமனுர் செய்பூசை தானுகந்தாய்

அந்தநிறை போரூர்ல் அதிபனுய்ச் சென்னையில் அமருவாய் கந்தகோட்டம்
ஆனகும ரக்கோட்டம் சண்முகக் கோட்டமற் ருதிசெவ்வேட் கோட்டமும்
அந்தண்மா மயிலத்தில் சொந்தமாந் தேவியர்தம் ஆசைக் குகந்துநின்ருய்
அழகேறு திருவேரகத்திலே குருசாமி அப்பனுக் கெனநின்றனை

செந்திரு விளங்குமச் சிக்கலம் பதியிலே சிங்கார வேலனுனுய்
திருவிடைக் கழியிலே குராநிழ லமர்ந்தனை சீரேட்டி குடியதனிலே
சித்திரா பௌர்ணமிக் காவடிகள் கொண்டனை செல்வர்புகழ் புள்ளூரிலே
சித்தங் குளிர்ந்த முத்துக் குமரனுயினை திகழருண கிரிமகிழவே

சந்தநிறை செந்தமிழை உதவி வயலூரிலே சார்ந்தனை விராலிமலையில்
சார்பரங் குன்றிற் சசிவல்லி நாயகன் தண்டாயுதன் பழநியில்
தண்கடற் சேந்தூரில் தேவசேனுபதி எனநின்ற சாமியுன்றன்
தலமதாம் செங்கோடு சென்னிமலை கதிரைபல தலங்களைப் போற்ற அருள்வாய்.

— ராவ்சாஹிப். வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.

உயர்ந்த வேலைப்பாட்டுக்குக்காரண்டி.
அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்
உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

வ. ரு. புருஷோத்தம செட்டியார்

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்
(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்)
நெ. 47, சைனாபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதராஸ்.

வெகு சரசம்! உத்திரவாதம்!!

எங்கள் சொந்த தரியில் தயார் செய்யும்

பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை,
பட்டு-சேலை தினுசுகள்
சாயத்திற்கும் ஜரிகைக்கும்

உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.
வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்

எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,
எஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.

பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பித்தெரு, சின்னகாஞ்சிபுரம்.

நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.

ஜெனரல் ஏஜண்ட்ஸ் யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு மதராஸ்.

தந்தி விலாசம் "சேமந்தகா" திருச்சி.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்கரிக்கச் செய்தது செமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மக்களின் அழகை அலங்கரிக்கச் செய்வது செமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் செமந்தகா வைரங்களை வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால் போற்றப் படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில் தலை சிறந்தது.

எமது

"செமந்தகா வைரங்களே"

உறுதியிலும் ஜொலிப்பிலும் அசல் வைரங்களைப் போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்.

தோடு சைஸ் வைரம். பேசரி சைஸ் வைரம்.

1-க்கு 1—0—0. 1-க்கு 0—14—0.

கிடைக்குமிடம்:---

மோதிரங்கய்ய செட்டியார் சன்

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்

ஏஜண்டுகள் தேவை.

Edited by Thirumuruga KIRUPANANDAVARI; Printed & Published by M. MADHUSOODANA SIVAM, at the THIRUPPUGAL AMIRTHAM PRESS, Kangayanellur, Via Katpadi, N. A.